முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 122/2013

வா.சா.1 – தெய்வசிகாமணி

14-06-2024 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) கோவில் சார்பாக தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். ஆங்கிலம் படிக்கத் தெரியுமா என்றால் தெரியாது. 3ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை தமிழில் இல்லை, ஆங்கிலத்தில் உள்ளது என்றால் சரிதான். க.ச.எண்.50ல் 6.50 ஏக்கர் சொத்து 1863ம் வருடத்தில் இருந்து அந்த சொத்து கோவில் பெயரில் உள்ளதாக ஆவணங்கள் உள்ளது என்றால் சரியல்ல.

2) வா.சா.ஆ.1 ஆவணம் 14.11.1918ம் தேதி ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் காளியப்ப கவுண்டர் மகன் நாச்சியப்ப கவுண்டர் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எழுதிக் கொடுத்தவர் பெயர் செல்லப்ப கவுண்டர் மகன் நாச்சியப்பன் என உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் இனாம் சர்வே 3ல் 1 பங்கு என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 5ல் 1 பங்கு என உள்ளது. வா.சா.ஆ.1ல் 3ல் 1 பங்கு என 3வது பக்கத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3) 27.11.1926ம் தேதிய வா.சா.ஆ.2 ஆவணத்தில் மாகாளியப்ப கவுண்டர் மகன் நாச்சியப்ப கவுண்டர், மைனர் சின்னச்சாமி கவுண்டருக்கு என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 சொத்து விவரத்தில் 5ல் 1 பங்கு என உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்திலும் 5ல் 1 பங்கு என இருக்க வேண்டும். தவறாக உள்ளது. எனக்கு கொடுக்கப்பட்ட பட்டாவில் என் சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் பட்டா கொடுக்கவில்லை.

4) வா.சா.ஆ.1, 2 ஆவணங்களின் படி அதில் சொல்லப்பட்டுள்ள சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என காண்பிக்க வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. சின்னச்சாமி கவுண்டர் அப்பா பெயர்

என்ன என்றால் நாச்சியப்ப கவுண்டர். நாச்சிமுத்து என்பது வேறு நபர் என்றால் சரியல்ல. இரண்டு பேரும் ஒருவரே. வா.சா.ஆ.2 ஆவணத்தில் நாச்சியப்ப கவுண்டர் மகன் சின்னச்சாமி கவுண்டர்என தவறாக உள்ளது, என்பதை திருத்தங்கள் செய்ய முயற்சித்தேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 முதல் 3 ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள சின்னச்சாமி கவுண்டர் என்பவர்வேறு, என் தகப்பனார் வேறு என்றால் சரியல்ல.

5) வா.சா.ஆ.5 ஆவணம் தாவாச் சொத்துக்கானது என சொல்ல முடியாது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 ல் உள்ள மின் இணைப்பு தாவா சொத்துக்கு உரியது இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 மற்றும் 4 ல் காளியப்ப கவுண்டர் மகன் நாச்சியப்ப கவுண்டர், மேற்படி ஊரில் வசிக்கும் சின்னச்சாமி, மைனர் சரவணபவன், சின்னப்பன் என்கிற கருப்புச்சாமி என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6) வா.சா.ஆ.5 ல் காளியப்ப கவுண்டர் மக்கள் நாராயண கவுண்டர், சின்னைய கவுண்டர், சின்னச்சாமி கவுண்டர் மனைவி நஞ்சம்மாள். சின்னநாச்சிமுத்து கவுண்டர் மகன் ராமசாமி கவுண்டர், நாராயணகவுண்டர் என்கிற கருப்ப கவுண்டர் மகன் கொண்டப்ப கவுண்டர், முருகப்ப கவுண்டர் மனைவி அம்மத்தாள் என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது பாகப்பிரிவினை பத்திரம் பாகதாரர்களின் பெயர் எழுதப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தில் சி செட்யூல் சொத்தாக நஞ்சம்மாளுக்கு 2.17 ஏக்கர் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவாச் சொத்து கோவிலுக்கு பாத்தியப்பட்டது தவறான ஆவணங்களின்படி தாவாச் சொத்தில் உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல. தாவாவில் கோரி உள்ள பரிகாரம் கிடைக்கத் தக்கதல்ல என்றால்சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2024.06.14 06:35:45 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.